1987 ஏப்ரல் 9]

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிவேகமான முறையில் இந்தப் பணியினை மேற்கொண்டாலும்கூட ஒரு கால அளவுக்குள் இந்தப் பணி முடிக்கப்படவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒரு வரையறை நிர்ணயித்து இவ்வளவு நாட்களுக்குள் முடிக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டால்தான் அந்தப் பணி விரைவாக முடிவடையும் என்று நான் கருதுகிறேன். எனவே அந்தப் பணி நிறைவேறுவதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பாலம் கட்டப்படுகிற அந்த இடம் ஒரு சிரமமான இடம். மொத்தமாக எல்லா வேலைகளையும் செய்ய சரியான இடம் அங்கேயில்லை. நிறைய சிரமம் இருக்கிறது என்பதை நானே நேரில் சென்று பார்த்தேன். சட்டமன்ற உறுப்பினரும் பார்த்திருக்கிறார். எனவே அதற்கு ஒரு காலத்தைச் சரியாக நிர்ணயிக்க முடியாது இருக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து சட்டமன்ற உறுப்பினரையும் பக்கத்தில் வைத்துக் கொண்டு அதற்கான ஏற்பாட்டைச் செய்யலாம். அதற்குப் பின்னால்தான் கால அளவை நிர்ணயிக்க முடியும்.

(உ) சேலம் மாவட்டம் காடையாம்பட்டி ஒன்றியத்திலுள்ள சில கிராமங்களுக்கு மின்கம்பிகள் இழுத்தல்.

* திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியத்திலுள்ள சேர்வராயன் மலைத் தொடரில் இருக்கும் கண்ணப்பாடி, பூமரத்தூர், வீராச்சியர் ஆகிய கிராமங்களுக்கு ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக தெரு மின் விளக்கு அமைக்க மின் லைன் கொண்டு செல்ல நிலம் சர்வே செய்யும்பொழுது வனத்துறை அதிகாரிகள் தடுத்து வருவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

[வி. வி. சுவாமிநாதன்] [1987 ஏப்ரல் 9

அறிக்கை.

காப்புக் காட்டின் வழியாக மின்கம்பி கொண்டு செல்வதற்கு 1980 ஆம் ஆண்டு வனப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் மத்திய அரசின் முன் அனுமதியைப் பெறவேண்டும். காடயாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கண்ணப்பாடி, பூமாத்தூர் மற்றும் வீராச்சியூர் கிராமங்களுக்கு மின்சார லைன் கொண்டு செல்வதற்கு அனுமதி கோரி விண்ணப்பம் ஏதும் வனத்துறைக்கு வரவில்லை.

கடந்த 31—12—1986 அன்று பொம்மிடி வனவர் மற்றும் பீட் பணியாளர்கள் கணவாய்ப்புதூர் காட்டினை தணிக்கை செய்து வரும்போது கண்ணப்பாடி வழியில் தெப்பக்குளம் சரகத்தில் குள்ளன் மகன் இராமசாமி மற்றும் ராமன் மகன் மாரி ஆகிய இருவரும் செடிகளை வெட்டிக் கொண்டு இருந்ததைப் பார்த்து இருவரையும் விசாரித்ததில் கண்ணப்பாடி மற்றும் கிராமங்களுக்கு மின்கம்பி இழுக்க காடயாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தினரின் உத்தரவின் பேரில் செடிகளை வெட்டியதாகத் தெரிவித்து இருக்கின்றனர். அவர்கள் அனுமதி ஏதுமின்றி காட்டினை வெட்டி சுத்தம் செய்ததால் அவர்கள் மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு நபர் ஒருவருக்கு ரூ. 25 அபராதம் வசூலிக்கப் பட்டது.

மேலும் கண்ணப்பாடி மற்றுமுள்ள கிராமங்களுக்குக் காப்புக் காட்டின் வழியாக இல்லாமல் முருவி மற்றும் புத்தூர் கிராமங் களின் வழியாக சுற்றுவழி மூலமாக மின்சார லைன் கொண்டு செல்ல வாய்ப்பு இருக்கிறது. குற்ற நடவடிக்கை எடுத்த பிறகும் கூட இதுவரையில் எந்தத் துறையிலிருந்தும் மின்சார லைன் கொண்டு செல்ல எவ்வித விண்ணப்பமும் வரப் பெறவில்லை என வனத் துறைத் தலைவர் தெரிவித்து உள்ளார்.

திரு. கே. **அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறிக்கையில் சில தவறான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. சென்ற டிசம்பர் மாதம் பொம்மிடி மின் அதிகாரிகள் அந்த மலைவாழ் கிராமங்களுக்கு மின் வசதி அளிப்பது சம்பந்தமாக மதிப்பீடு செய்து சர்வே செய்யச் சென்ற போது அந்த கிராமத்து மக்களும் உடன் இருந்தார்கள்.

1987 ஏப்ரல் 9] [திரு. கே. அன்பழகன்.]

அப்போது பொம்மிடி பாரஸ்ட்டர் மற்றும் வனத்துறை அதிகாரிகள் அவ்வாறு சர்வே செய்வதைக் குறுக்கிடு செய்ததாக பொது மக்கள் நேரில் வந்து முறையிட்டார்கள். என்னிடம் அதை உடனடியாக நான் சேலம் மாவட்ட வன அலுவலரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன். காப்புக் காட்டின் வழி யாக மின்சார லைனைக் கொண்டு போகும்போது முறைப்படி மத்திய அரசின் அனுமதியைப் பெறலாம். திட்ட மதிப்பீடு செய் வதற்கு, சர்வே செய்வதற்கு மின்சாரத் துறை அதிகாரிகளை அனுமதிக்க வனத் துறைக்கு அரசு ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காப்புக்காடு, (Reserve Forest) வழியாக மின் கம்பி இழுத்துக்கொண்டு போக வேண்டும் என்றாலும், ரோடு போட வேண்டுமென்றாலும் முன் அனுமதியைப் பெற வேண்டும். மாநில அரசுக்கு எழுதி மாநில அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய வேண்டும். வன இலாக்காவிற்கு எந்தத் துறையும் பரிந்துரை செய்யவில்லை என்று அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் காப்புக் காட்டு வழியாக இல்லாமல் வேறு வழியாகக் கொண்டு செல்லலாம் என்ற தகவலும் தரப்பட்டிருக்கிறது. விரைவிலே வேண்டும் என்றால், காப்புக்காட்டு வழியாக அல்லாமல் மற்ற வேறு வழியாக மின் கம்பிகளை எடுத்துச் செல்லலாம்.

(முற்பகல் 11-20)

திரு. கே. அன்பழகன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து தர வேண்டும் என்று காண்டியாம்பட்டி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் ஏற்கெனவே கடிதம் எழுதியுள்ளார். 9—1—1987, அன்று நடைபெற்ற சேலம் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் இது குறித்துப் பிரேரணை கொண்டு வரப்பட்டு விவாதிக்கப் பட்டுள்ளது. மாவட்ட வன அலுவலரும் மத்திய அரசுக்கு அனுமதியைக் கேட்டு, கருத்துரு தயாரிக்க அதற்குத் தேவையான வரைபடங்களை ஒன்றிய ஆணையாளரிடம் கடிதம் எண் 13257/86, நாள் 1—12—1986-ல் கேட்கப்பட்டுள்ளதாக சேலம்

[திரு. கே. அன்பழகன்] [1987 ஏப்ரல் 9

மாவட்ட வன அலுவலர் தெரிவித்துள்ளார். தகவல் வரவில்லை, கோரிக்கை இந்தத் துறைக்கு வரவில்லை என்று சொல்லுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் காப்புக்காடு வழியாகத்தான் அந்தக் கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து தர முடியும் என்று பொம்முடி மின் வாரிய அதிகாரி தெரிவித்திருப்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மலைவாழ் கிராமங்களுக்கு மின்வசதி கொடுக்க சம்பந்தப்பட்ட மின் வாரிய, வனத்துறை அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவிடுவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொடுத்த தகவலின் பேரில் மின் வாரியத்தோடு தொடர்பு கொண்டு ஏற்கெனவே வனத்துறைக்கு எழுதப்பட்டிருந்தால் அதை மைய அரசுக்கு எழுதி விரைவில் மின் கம்பி எடுத்துச் செல்ல அனுமதி வழங்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

4. வரவு-செலவுத் திட்டம், 1987-88, வாக்கெடுப்பு—(தொடர்ச்சி.)
கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 35—நுகர் பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 1,54,56,05,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. சோ. மா. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 35—நுகர் பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,54,56,05,000 இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."